**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்**
**C.C.No.43/2016**

2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 1 - (PW 1) ஆக திரு.ராமஜெயம் என்பவரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.த.சிவக்கொழுந்து, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராமஜெயம் | வயது | : | |
| த/பெ. | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**24.01.2020**

***முதல் விசாரணை***

நான் தேவனூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது தந்தை ராமனுஜம் 17.07.2012-ம் தேதியன்று இறந்து விட்டார். எனது அப்பாவின் வாரிசை சான்றிதழ் கேட்டு ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்திருந்தேன். அந்த மனுவின் பேரில் உரிய விசாரணை முடித்து வட்டாட்சியர் அலுவலகத்தில் சான்று வழங்க நிலுவையில் இருந்தது. அப்பொழுது வாரிசு சான்றிதழ் கொடுக்கும் பிரிவில் எதிரி தெய்வசிகாமணி எழுத்தராக பணிபுரிந்து வந்தார். அப்போது எனது அப்பாவின் வாரிசு சான்றிதழ் தயார் ஆகி விட்டதா என்று கேட்டதற்கு அவர் ரூ.500 லஞ்சம் கேட்டார். பிறகு நான் திருச்சி லஞ்சம் ஒழிப்பு அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். அதன் பேரில் லஞ்சம் ஒழிப்பு போலீசார் தெய்வசிகாமணியை கைது செய்து நடவடிக்கை எடுத்தார். அந்த வழக்கு அரியலூர் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. தெய்வசிகாமணி இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சியை சமாதானமாக போக சொல்லி நேரிலும் எதிரிகள் மாயவேல், செல்வகுமார் ஆகியோர்கள் மூலமாக என்னை கேட்டு வந்தார்கள். நான் சமாதானத்தை ஒப்புக்கொள்ளவில்லை. 25.11.2014-ம் தேதியன்று மாயவேல் வீட்டில் மாயவேல், செல்வகுமார், தெய்வசிகாமணி மகன் பாபு ஆகியோர்கள் என்னை கூப்பிட்டு பஞ்சாயத்து செய்தார்கள். தெய்வசிகாமணிக்கு சாதகமாக சாட்சி சொல்ல என்னிடம் ரூ.10,000/- பணம் கொடுக்க வந்தார்கள். நான் பணத்தை வாங்கவில்லை. நான் சம்பவத்தில் என்ன நடந்ததோ அதை தான் சொல்வேன் என்று பணத்தை வாங்கவில்லை. பின்னர் மாயவேலும் செல்வகுமாரும் என்னிடம் ஊரில் என்ன பிரச்சனை நடந்தாலும் நாங்கள் கேட்கமாட்டோம் என்று என்னை மிரட்டினார்கள். சில நாட்கள் கழித்து மாயவேல் என்னிடம் தெய்வசிகாமணி என்னிடம் 1 லட்சம் பணம் கொடுத்ததாகவும் அதை பெற்று கொண்டு சமாதானமாக போகும்படி கூறினார். நான் பணத்தை வாங்கவில்லை. அதன்பிறகு நான் வாரியங்காவலிருந்து தேவனூருக்கு செல்லும் வழியில் அடையாளம் தெரியாத, பெயர் விலாசம் தெரியாத இரண்டு பேர்கள் தெய்வசிகாமணிக்கு சாதகமாக சாட்சி சொல்ல வேண்டும் என்று மிரட்டினார்கள். இதனால் என் உயிருக்கு தெய்வசிகாமணி, மாயவேல், செல்வகுமார் ஆகியோர்களால் என் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை வந்தது. நான் இது சம்மந்தமாக அரியலூர் மாவட்ட ஆட்சியரிடம் 22.12.2014-ம் தேதியன்று புகார் கொடுத்தேன். அதன்பேரில் ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்து விசாரித்தார்கள் ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் 07.01.2015-ம் தேதியன்று அரியலூர் அமர்வு நீதிமன்றத்தில் நான் நடந்தது சம்மந்தமாக எழுத்துபூர்வமாக எதிரிகளின் மீது புகார் கொடுத்தேன். என்னிடம்

காட்டப்படும் புகார் மனு மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.

*(இவ்வழக்கில் இன்று அரசு உதவி வழக்கறிஞர் ஆஜராகததால் அ.சா.1-ன் முதல் விசாரணையின் தொடர்ச்சி அடுத்த வாய்தாவிற்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)*